

திருச்சிராப்பள்ளி மத்திய பேருந்து நிலையத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் விடுமுறை தினம் முடிந்து ஊர் திரும்ப கூட்டம் அலைமோதியதால் ஆய்வு மேற்கொண்டு ஆலோசனைகள் வழங்கினார். ஆய்வின் போது அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் கோட்ட மேலாண் இயக்குனர் ஆர்.மோகன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக திருச்சிராப்பள்ளி மண்டல பொது மேலாளர் எஸ்.சக்திவேல் மற்றும் போக்குவரத்துத்துறை அதிகாரிகள், தொ.மு.ச. மாவட்டச் செயலாளர் குணசேகர் உட்பட பலர் உடன் இருந்தனர்.



நாகை மாவட்டம் நாகை நாகநாதர் மேல வீதியைச் சேர்ந்த குஞ்சம்மாள் என்பவரது கூரை வீடு வெடி வெடித்தபோது தீப்பிடித்து சேதம் ஏற்பட்டது. இதையடுத்து நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என். கௌதமன் நேரில் பார்வையிட்டு ஆறுதல் கூறி கழகத்தின் சார்பில் நிதி உதவி வழங்கினார். உடன் நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, நகரக் கழக துணைச் செயலாளர் சித்திராகுலோத்துங்கன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் குலோத்துங்கன், தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் செல்வா, வார்டு நிர்வாகிகள் துரையரசன், அர்ச்சுனன், நாகதேவன் மற்றும் பலர் உள்ளனர்.

தலைமைக் கழகப் பேச்சாளர் - திருச்செங்கோடு

# முரசொலி முத்து மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

*சென்னை, நவ. 15-*

நாமக்கல் மேற்கு மாவட்டம், திருச்செங்கோடு நகரக் கழக முன்னாள் செயலாளரும் தலைமைக் கழகப் பேச்சாளருமான முரசொலி முத்து நேற்று முன்தினம் (13.11.2023) காலை 11 மணி அளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும் கழக நிர்வாகிகள், தோழர்கள் ஏராளமானோர் மறைந்த முரசொலி முத்து உடலுக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.



நன்னியூர் ராஜேந்திரன் தலைமை! இல.பத்மநாபன் வாழ்த்துரை!

# மேற்கு மண்டல நெசவாளர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

## அமைச்சர்கள் க.பொன்முடி - மு.பெ.சாமிநாதன் - ஆர்.காந்தி சிறப்புரை!

*திருப்பூர், நவ. 15-*

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி கோவை தெற்கு, கோடை வடக்கு, கோவை மாநகர், திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்தியம், தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, நீலகிரி உள்ளடக்கிய மேற்கு மண்டல நெசவாளர் அணி மாவட்ட மாநகர, தலைவர், துணைத் தலைவர் மற்றும் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டம் இன்று (15.11.2023 - புதன் கிழமை) காலை 10.00 மணியளவில் கலைஞர் அறிவாலயம், பலவஞ்சி பாளையம் பிரிவு, திருப்பூர் - 08 எனும் முகவரியில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் ராஜேந்திரன் தலைமை வகிக்கிறார்.

ஓ.ஏ.நாகலிங்கம், க.பழனிச்சாமி, காஞ்சி தி.அன்பழகன், பரணி கே.மணி, நெல்லை, சொ.பெருமாள், சிந்து ரவிச்சந்திரன், வசந்தம் ஏ.சி.ஜெயக்குமார், ஜி.வி.மணிமாறன், ஆ.ராமசாமி, மு.கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம் வரவேற்கிறார். கே.எம்.நாகராஜன் நிகழ்ச்சியை ஒருங்கிணைக்கிறார்.

இக்கூட்டத்தில் அமைச்சர்கள் முனைவர் க.பொன்முடி, மு.பெ.சாமிநாதன், ராணிப்பேட்டை ஆர்.காந்தி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன் வாழ்த்துரை வழங்குகிறார். கே.எஸ்.பி.ராஜேந்திரன் நன்றி கூறுகிறார்.

இக்கூட்டத்தில் அனைத்து நிர்வாகிகளும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு தலைமைக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

முத்தமிழறிஞர் கலைஞரின் மைத்துனரும்

கழக மூத்த முன்னோடியுமான

# கோயில் திருமாளம் தட்சிணாமூர்த்தி 101-ஆவது பிறந்த நாள்!

## 'முரசொலி' வாழ்த்தி மகிழ்கிறது!

**சென்னை, நவ. 15-**

**திருவாரூர் மாவட்டம் நன்னிலம் ஒன்றியம் - கோயில் திருமாளத்தைச் சேர்ந்த கழகத்தின் மூத்த உறுப்பினர் கோ.தட்சிணாமூர்த்தி அவர்களுக்கு 101-வது பிறந்த நாள்.**

**இதனையொட்டி அவரை முரசொலி வாழ்த்தி வணங்குகிறது.**

கழக மூத்த முன்னோடி கோ.தட்சிணாமூர்த்தி அவர்கள் தலைவர் கலைஞர் அவர்களின் துணைவியார் தயாளு அம்மையாரின் மூத்த சகோதரர் ஆவார். இவர் தமது இளமைக் காலந்தொட்டு கழகத்தில் ஈடுபாடு கொண்டவர். கோ.தட்சிணாமூர்த்தி அவர்கள் கழகத்தின் மூத்த உறுப்பினரும் கோவில் திருமாளம் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவராகவும், மாவட்ட வேளாண் ஒழுங்குமுறை விற்பனை குழுவின் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர் ஆவார். இவர் தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் தன்னை பங்கு எடுத்துக் கொள்ள செய்தவர் ஆவார்.

குறிப்பாக இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பங்கு பெற்று சிறைவாசம் அனுபவித்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் கழகத் தலைவர் தளபதி அவர்கள் கைகளால் பொற்கிழி பெற்றவர் என்பதும் கூடுதல் சிறப்பாகும்.

திருமாளம் கோ.தட்சிணாமூர்த்தி அவர்களைப் பற்றி மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் தனது நெஞ்சுக்கு நீதி புத்தகத்தில் பக்கம் 241ல் நீண்ட நினைவுகளை பதிவு செய்திருப்பது மேலும் பெருமைக்கு உரியதாகும்.

கோ.தட்சிணாமூர்த்தி அவர்களின் பிறந்தநாளையொட்டி அவருக்கு 'முரசொலி' பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து மகிழ்கிறது.

# முதலமைச்சரும் தீபாவளி வாழ்த்தும்!

## கவிப்பேரரசு வைரமுத்து பதில்!





**ஊடகத்தார் கேள்வி:**

*தீபாவளிக்கு முதலமைச்சர் வாழ்த்துச் சொல்லவில்லை என்று சொல்கிறார்களே?*

**கவிப்பேரரசு வைரமுத்து பதில்:**

**மகளிர்க்கு உரிமைத்தொகை வழங்கியதன்மூலம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் முதலமைச்சர் வாழ்த்துச் சொல்லிவிட்டாரே! ஒரு பழமொழி உண்டு: "சொல் என்பது பித்தளை; செயல் என்பது தங்கம்." பித்தளையால் வாழ்த்துவதைவிட தங்கத்தால் வாழ்த்தியிருக்கிறார் தங்கத் தளபதி. சொல்லால் வாழ்த்துவதைவிட செயலால் வாழ்த்துவது சிறப்பல்லவா?**

# மாதவரத்தில் ஆட்டோ ஓட்டுநர் சங்க ஆண்டு விழா!

*சென்னை, நவ. 15-*

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, 16 வது வட்டம், மணலி புதுநகர் பகுதியில் அமைந்துள்ள தொழிலாளர் முன்னேற்ற சங்க ஆட்டோ ஓட்டுநர் சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு விழா மணலி புதுநகர் திருவள்ளுவர் சிலை அருகே நடைபெற்றது.

சென்னை பெருநகர ஆட்டோ ஓட்டுநர் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் கடந்த ஐந்தாண்டுகளாக தொடர்ந்து பெயர் பலகை திறப்பு விழா மற்றும் கழக கொடியேற்று விழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு 16 வது வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன் தலைமை தாங்கினார். கவுன்சிலர் ஆ.ராஜேந்திரன், மாவட்ட பிரதிநிதி நா.மோகன் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆட்டோ ஓட்டுநர் சங்க நிர்வாகிகள் எல்.சரவணன், எஸ்.மைக்கேல், ஆர்.லோகநாதன், இ.சுரேஷ், பி.சந்துரு, கே.மணி, பி.செல்வம், சாமுவேல், ஆர்.சுந்தர், ஜி.செழியன், எம்.முத்து ஆகியோர் வரவேற்றனர்.

மாதவரம் வடக்கு பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் கலந்துகொண்டு சங்க பெயர் பலகையும் கழகக் கொடியையும் ஏற்றி வைத்து ஆட்டோ ஓட்டுநர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் வக்கீல் பி.கே.கண்ணன், கார்த்திகேயன், சி.எம்.ராஜா, பிரபு, டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ், செமின் எடிசன், எலந்தனூர் சிவப்பிரகாஷ், மணிகண்டன், உதயகுமார், கடப்பாக்கம் கிருபாகரன், குளக்கரை ரிஷி, நித்யா, யாசின், ஸ்டாலின், ஜான்பால், வி.கார்த்திகேயன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு கொண்டாடினர். முன்னதாக மணலி புதுநகர் பகுதியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு கழக நிர்வாகிகள் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## வெங்கிடங்கால் சந்தானம்

**நவம்பர் 15 (2005)**



**நாகை மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவர். ஒன்றியப் பெருந்தலைவர், ஒன்றிய தி.மு.க. அவைத்தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியுள்ளார்.**

**நெருக்கடி நிலையின்போது மிசாவில் கைதாகி ஓராண்டு சிறையில் இருந்தவர்.**

**கழகம் நடத்திய அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றுள்ளார்.**

**1967ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் சைதை தொகுதியில் போட்டியிட்டபோது தலைவர் கலைஞர்மீது மாற்றுக் கட்சியினர் தாக்குதல் நடத்தியபோது கலைஞரை உடனிருந்து பாதுகாத்தவர்களில் இவரும் ஒருவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

